Registered as a News
Paper in Ceylon
P M G No. B A
59/300 of 1939.

உ

இந்துசாதனம்

விரோதி வருஷம்
(1889)
ஆவணி மாதம்
28ந் உ ஆரம்பமானது

செவ்வாய் வெள்ளிதோறும் வெளிவருவது

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசுதென்றலும் வீங்கிளவேனிலும், மூசுவண்டறை பொய்கையும் போன்றதே, ஈசனெந்தை யிணையடி நீழலே

[புத். - ௬௩] யாழ்ப்பாணம்:- கரஹு வைகாசி மீ ௪ உ வெள்ளிக்கிழமை (18 மே 1951) [இல். - ௧௨]

சந்மார்க்கம்

[காரைநகர் கருங்காலிச் சுப்பிரமணியசுவாமி ஆலயத்தில் வித்துவான் மு. சபாரத்தினம் செய்த பிரசங்கச் சுருக்கம்]

(முற்றொடர்)

செம்பிற் களிம்புபோல உயிரை என்றும் பற்றியுள்ள ஆணவம் முதலாம் மலவாற்றல் இறைவன் சிற்சத்தியாலொழியப்பெற்று இறைவனுடன் இரண்டறக் கலந்து சலிப்பின்றி யனுபவிக்கும் பேரின்ப நிலையே உண்மைநிலையெனப்படும். இந்நிலையிலுள்ள இறையுயிர்களின் சிறப்பு இயைபையே அத்துவிதமென்ப. ஒரு வண்டு தேனிறைந்த மலரில் வீழ்ந்து அம்மதுவை மிகுதியாகவுண்டு களித்து அதன் கட்டோய்ந்திருக்கும்பொழுது தான்வேறு மதுவேறு என்னும் வேற்றுமையுணர்வின்றிக் கிடத்தல்போல, ஆன்மா இறைவனிடத்துப் பேரின்ப நுகர்ச்சியிற் றலைப்பட்டுத் தான் வேறு ஒரு பொருள் என்னும் உணர்வின்றி யொன்றுபட்டிருக்கும் அந்நிலையே அத்துவித நிலையாகும்.

உண்மை நிலையை ஆராயுமிடத்துத் தெளியப்பட்ட நித்தியப் பொருட்கள் மூன்றாகும். அவை இறை, உயிர், தளை என்பனவாம். இறைவன் மாற்ற மனங்கழிய நின்ற மறையவராகவும், எல்லாந் தாமாய் என்றும் அழிவின்றி நிறைந்த உண்மையறிவின்ப உருவினராயும் பதிஞானத்தாலன்றிப் பாசபசுஞானங்களாலறியப்படாதவராகியும் உள்ளாராதலின் அவரைக் கருதலளவையாற்றான் அறிதல் கூடும். அவயவப் பகுப்புடையனவாய்க் காரிய வடிவமாகவுள்ள பலவகையான இவ்வுலக அமைப்புகளை நோக்கினால் இவை ஒருவனா லாக்கப்பட்டன வென்பது புலனாகும். இக்கருத்தையொட்டியே வள்ளுவர் பெருமானும்,

"அகர முதல வெழுத்தெல்லா மாதி
பகவன் முதற்றே யுலகு"

என்று காணப்பட்ட உலகத்தாற் காணப்படாத கடவுட்கு உண்மை கூறினார்.

வீடு என்பது எல்லாப் பொருட் பற்றுகளையும் விடுதலேயாதலானும், அங்ஙனம் விட்டபின் மீண்டு பிறத்தலின்மையானும், அப்பிறப்பின்மையை ஆன்மாக்களுக்கு உதவும் பதிக்குப் பிறப்பிறப்பின்மை இன்றியமையாதென்பது யாவராலும் அங்கீகரிக்கற்பாலதே. இவ்விலக்கணம் சிவபிரானிடத்தன்றிப் பிற தேவரிடத்தின்மையானும் அவரெல்லாம் பிறந்து வாழ்ந்திறந்த கதை புராணங்களிற் கேட்கப்படுதலானும் சிவபெருமானே முழுமுதற் கடவுளென்பது தெளியப்படும். இச்சிவபரஞ்சுடரைப் பரம்பொருளெனத்தேற்றி, அவரையடைய விரும்பித் தன்னையடுத்தாரை நேரே கொண்டு செலுத்தும் உண்மைநெறி சைவசமயமே யாதலின் அதுவே சன்மார்க்கமென்பதில் ஒருசிறிதும் ஐயமின்று. இதுபற்றியே தாயுமானசுவாமிகளும்,

"சைவசமயமே சமயஞ் சமயாதீதப்
பழம்பொருளைக்
கைவந்திடவே மன்றுள்வெளி
காட்டுமிந்தக் கருத்தை
விட்டுப்"

தொடர்ச்சி 3-ம் பக்கம்

ஈழநாடும் சைவமும்

(திரு. மு. ஞானப்பிரகாசம் B. A. B. Sc.)

முற்றொடர்

உரையாசிரியர்கள்

தமிழ்மக்களின் பழம்பெரும் பண்பாட்டிலேயே தமிழ்மக்கள் வளர்ந்து வருதல் வேண்டும் என்ற அதி தீவிரமான கொள்கையை யுடையவர் நாவலர் பெருமான். சுத்தப் பண்பாட்டில் வளர்வதற்குப் புராணபடனம் போன்ற சாதனம் பிறிதொன்றில்லை என்ற துணிபுடையவர். அதனாற்றான் பெரியபுராணம் கந்தபுராணம் ஆகிய இரண்டினையும் எவைகளின் இப்பெரும் புண்ணியக் கண்களென மதித்து, அவற்றை நியமந்தவறாது படனஞ்செய்ய வேண்டுமென எம்மவர்க்கு உபதேசித்தும், செயலிற்செய்து காட்டியும் சென்றனர். நாவலர் பெருமான் உணர்த்தியருளிய 'புராணபடனத் தொண்டின்' பெருமையை உண்மையில் உணர்ந்தருளிய பெரியார், அக்காலத்தில் மூவராகும். அவருள் ஒருவர் இங்கிருந்து திருவண்ணாமலை சென்று தம்பிரான் ஆகத் திகழ்ந்து, பெரிய புராணத்திற்கு முதன் முதலாக உரை இயற்றிய ஆறுமுகத்தம்பிரான் சுவாமிகள். மற்றைய இருவரும் நாவலர் காட்டிய நன்னெறியில் ஒழுகிவந்த அவர் தம் ஞானப் புதல்வர்களே. வித்துவசிரோமணி ந. ச. பொன்னம்பலப்பிள்ளையையும், அவரிடத்தில் நேரே கற்றவர் தம்கண்மாணாக்கராகிய உரையாசிரியர் என்னும் சிறப்புப் பெயர் தாங்கிய மட்டுவிற் சைவப்பெரியார் க. வேற்பிள்ளை அவர்களையுமே இங்கு சுருதுகின்றோம். எங்கள் நாட்டிலுள்ள கோயில்களிலும், வீடுகளிலும் கந்தபுராணம், பெரிய புராணம், திருவிளையாடற் புராணம், திருவாதவூரர் புராணம் முதலியவற்றைப் படித்துப் பொருள் சொல்லி, பொருள் சொல்லுங்கால் கேட்டவர்கள் 'யாழிசையோ பாரதிதன் இன்னிசையோ' என்று வியக்குமாறு நமக்கு இயற்கையமைந்த இனிய மிடற்றொலியோடும் விரிவுரையோடும் சொல்லின்பமும் பொருளின்பமும் தோன்றச் செ [illegible] சைவச் செல்வர்கள் இவர்கள். உரையாசிரியர் எழுதிய திருவாதவூரர் புராண உரை, அபிராமி அந்தாதி உரை, புலியூர் அந்தாதி உரை முதலியன அவர்களின் இலக்கிய வல்லமையையும் சைவசித்தாந்த சாத்திரப் பேருணர்ச்சியையும், நன்கு காட்டுவன. இக் காலத்தில் 'வளர்ந்தோர்க்குக் கல்வி' என்ற ஒரு கூக்குரல் எங்கும் கேட்கப்படுகின்றதல்லவா? வளர்ந்தோரின் உள்ளப்பாங்கு எப்படிப்பட்டது? அவர்கள் அபிலாஷை யாது? என இவற்றை நன்கு ஆராய்ந்த பின்னரே ஆதாரக் கல்வியோ, அவர்கட்குப் புகட்டப்படுதல் வேண்டும். அவைகளை ஆராயாது புகட்டப்படும் கல்வி — இல்லை, அந்த வளர்ந்தோர்மீது திணிக்கப்படும் கல்வி — வெறும் பயனற்றதாகவே கழியும். இக்காலத்தில் எங்கள் மக்களிடத்தில் — முக்கியமாக எங்கள் வளர்ந்தோரிடத்தில் — மனக்கொதிப்பு இருப்பதற்கு நியாயம் பணம் பதவி நிலம் புலம்

தொடர்ச்சி 4-ம் பக்கம்

கற்ற பெரியார் சந்மானிக்கப்பெற்றமை

யாழ்ப்பாணத்தில் தமிழ்விழா நடைபெற்றபோது வித்துவான் சி. கணேசையருடைய கல்வித்திறமையையும் அவர் தமிழின்பொருட்டுச் செய்த சேவையையும் பாராட்டி மேற்படி விழா மண்டபத்திலே ஐயரவர்கட்கு விலைபெற்ற ஒரு பீதாம்பரம் பரிசிலாக வழங்கப்பட்டது. அவருடைய திறமையையும் சேவையையும் வியந்து ஆசிரியர் ரா. பி. சேதுப்பிள்ளை தமிழ் வளர்ச்சிக் கழகத் தலைவர் திரு. தி. சு. அவிநாசிலிங்கம் முதலானோர் பெருக்கப் பேசினர்.

உ

தோத்திரம்

காணவந்த கடம்பவ னேசர்தாள்
பூணவந்து புந்தியேன் றுள்ளமை
ஆணவந்தோடுத் தஞ்சுமிங் கஞ்சுமே
நாணவந்த நமன்சின மாறுமே

உலகத்திலுள்ள ஆன்மகோடிகளெல்லாந் தரிசித்து ஈடேறும் வண்ணம், கடம்பவனம் எனப்படும் மதுரைத்திருப்பதியிற் கோயில்கொண்டருளிய சொக்கலிங்கப்பெருமானுடைய திருவடிகளை எமது உள்ளமானது தியானிக்குமேயானால், எம்மை ஆணவம் முதலாகிய மும்மலங்களும் பஞ்சப்புலன்களும் பற்றுதற்குப் பயப்படும்; பாசத்தைக் கொண்ட அந்த யமனுடைய சீற்றமும் தணிந்துவிடும் என்பது பொருள்.

நாண - பாசத்தையுடைய; நாண் - பாசம்; [illegible]; சொக்கலிங்கப்பெருமானுடைய திருவடிகளைத் தியானிப்போர்க்கு மூவகை மலாதிகளாலும் ஐம்புலன்களாலும் எவ்வகையான தீமையும் சேரா; யமபயமுமில்லையாம் என்றபடி.
(74)

சிறுமியை மானபங்கஞ் செய்ய முயன்ற 'போட்'டருக்குச் சிறைத் தண்டனை

"இது பெரும் அடாதசெயல்" என்று கடிந்து, கண்டி நீதிபதியாகிய திரு. N கிருஷ்ணதாசன், சென்றவாரம், பேராதனைப் புகையிரத ஸ்தானத்தில் வேலை செய்யும் மகமத் இஸாக் என்னும் போட்டருக்கு ஆறு மாசக் கடுஞ் சிறை விதித்தார்; முறைப்பாட்டின் வரலாறு:-

இங்குள்ள பேராதனைப் பள்ளிக்கூடத்திற் படிக்கும் பாக்கியம் என்னும் 13 வயசுவரையுள்ள சிறுமி, தெல்தெனியாவில் வசிக்கும் தனது பிதாவிடம் புறப்பட்டுத் தனியே வருவதாகவும், பேராதனைப் புகையிரத ஸ்தானத்திலே தன்னைக் குறித்த நேரம் வந்து சந்தித்துக் கூட்டிக்கொண்டுபோகும்படியும், தகப்பனுக்கு முன்னமே தந்திச் செய்தி அனுப்பியிருந்தாள். குறித்தபடி, குறித்த நேரத்திற் சங்கேதப்படி பேராதனைச் சந்திப் புகையிரத ஸ்தானத்திற் போய் இறங்கியபோது தன் பிதா வந்து நிற்கக் காணாமையால் திகைத்தாளாம்; அப்பொழுது குறித்த போட்டர் அந்தப் பெண்ணிடம் வந்து, அவள் போகவேண்டிய இடத்திற்குத் தான் [illegible] ஏற்றி அனுப்புவதாகச்சொல்லி, [illegible] தனியே கூட்டிக்கொண்டு போக, முன் பின்னறியாத சிறுமியும் அவன் பின்னே சென்றுள். தனிமையான ஒரு இடத்திற்குக் கூட்டிக்கொண்டுபோனவுடன் அந்தப்போட்டர் அச் சிறுமியை மானபங்கஞ் செய்ய முயன்றுள்; [illegible] வழக்குத் தொடர்ந்ததில் குறித்த போட்டருக்கு மேலே சொல்லப்பட்ட சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது. தகப்பனுக்குச் சிறுமியனுப்பிய தந்திச் செய்தியும் [illegible] தாமதிக்கப்பட்டதென விசாரணையின்போது புலப்பட்டதாம்.

ஞானபுரீசுவரர் கோயில் மகோற்சவம்

தென்னிந்தியாவிலுள்ள தருமபுர ஆதீனத்தைச் சேர்ந்த ஞானபுரீசுவரர் கோயிலில் சென்றவியாழக்கிழமை (17-5-51) கொடியேறி மகோற்சவம் நடைபெறுகின்றது. உற்சவ காலங்களிலே திருமுறைகள் கந்தபுராணம் திருவிளையாடற் புராணம் முதலிய புராணங்கள் திருக்குறள் என்னும் இவைகள் விஷயமான பிரசங்கங்கள் சான்றோர் பலரால் செய்யப்படுகின்றன. மேற்படி ஆதீன இசைப் புலவராகிய இசையரசு M. M. தண்டபாணிதேசிகர் போன்ற சங்கீத வித்துவான்களால் தமிழ்வேத பாராயணம் முதலியன செய்யப்படும்.

L. K. S. LEBBAY BROS
GOLD HOUSE

எல். கே. எஸ். லெப்பை பிரதஸ்
தங்கமாளிகை
கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்.

இலங்கையின் மிகப் பெரிய
— நகை —
வியாபாரிகள்
= O =
தந்தி: "JEWELLERS"
போன்: 161.

ஸ்தானம்:
63, கன்னாதிட்டி,
யாழ்ப்பாணம்.

வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாம்அர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.

இந்துசாதனம்

யாழ் கர ௵ வைகாசி௴ ௪உ வெள்ளிக்கிழமை

மலையாளப் புகையிலை யாபாரத்திற்கு ஆபத்து நேருமா?

யாழ்ப்பாணநாட்டிலுள்ள மக்களுக்கு நெல் விளைத்தலுக்கு அடுத்த, பிரதானமான விவசாயத்தொழில் புகையிலை விளைத்தலாகும். புகையிலையுள்ளும் மலையாளத்துக்கு ஏற்றுமதி செய்தற்காகிய புகையிலைச் செய்கையே முக்கியமாகும். யாழ்ப்பாணத்திற்கும் மலையாளத்திற்குமிடையேயுள்ள புகையிலை வியாபாரத் தொடர்பு மிகப் புராதனமானது: இவ்வியாழ்ப்பாணத்தின் கண்ணேயுள்ள மக்களுட் பெரும்பாலாருடைய வாழ்க்கை மலையாளத்திற்காகிய புகையிலை விளைப்பதிலும் அந்தப்புகையிலையாபாரத்திலுமே பெரிதும் தங்கியிருக்கின்றதென்பது மிகையாகாது.

இக் நாட்டிலிருந்து மலையாளத்திற்கு ஏற்றுமதி செய்யப்படும் புகையிலை புகைத்தற்காகியதல்ல. தின்னற்காகியதாம். மலையாளப் பகுதியிலும் விசேஷமாகத்திருவிதாங்கூர்ப் பகுதியிலுள்ள மக்களே இப் புகையிலையை இங்கிருந்துதருவித்துத் தின் புகையிலையாக உபயோ[illegible]ன்றார்கள். முற் காலத்திலே ஆண்டுதோறும் பதினுயிரம் கண்டி நிறைகொண்ட புகையிலை இங்கிருந்து மலையாளத்திற்கு ஏற்றுமதி செய்யப்பட்டது. (600 ரூத்தல் நிறை கொண்டது 1 கண்டி) ஆனல் 1934 ம் ஆண்டில் திருவிதாங்கூர் அரசினர் இங்கிருந்து அங்கு அனுப்பப்படும் புகையிலையைக் கட்டுப்படுத்தத் தலையிட்டனர். அதாவது ஆண்டுதோறும் 5075 கண்டிக்கு மேற்படாத புகையிலையைத்தான் இங்கிருந்து தம் நாட்டிற்கு ஏற்றுமதி செய்யலாகுமெனபது திருவிதாங்கூர் அரசினரின் கட்டுப்பாடாயிருந்தது. இது மாத்திரமல்லாமல், இப் புகையிலைக்குத் தங்கள் துறைமுகத்தில் இறக்குமதி வரிவிதித்திருந்த திருவிதாங்கூர் அரசினர் ஒரு கண்டி நிறைகொண்ட புகையிலைக்கு 900 ரூபா என அவ் வரியையும் மிக உயர்த்தினர். பின்னர் இங்குள்ள புகையிலை விவசாயிகளும் வியாபாரிகளும் இவ் விஷயத்தை இலங்கை அரசினர்க்கு முறையிட, இலங்கை அரசினர் இதிலே தலையிட்டு ஒரு கண்டிக்குத் 900 ரூபா என உயர்த்தப்பட்டிருந்த தீர்வையை 90 ரூபாய்வீதமாகக் குறைப்பித்தனர். ஆனல் காலகதியில் இத் தீர்வை கண்டி ஒன்றுக்கு 135 ரூபாவாகவும் பின் 200 ரூபாவாகவும் அதிகப்பட்டு சென்ற 1945 ம் ஆண்டில் 300 ரூபாவீதம் ஏறியது. இப்படித் தீர்வை உயர்த்தப்பட்டாலும் திருவிதாங்கூர் மக்கள் யாழ்ப்பாணப் புகையிலையையே விசேஷமாக விரும்பினர்.

திருவிதாங்கூர் அரசினர் புகையிலைத் தீர்வையைக் கண்டி ஒன்றுக்கு 300 வீதம் உயர்த்தி விதித்ததோடமையாது, இங்கிருந்து அங்கு ஏற்றுமதி செய்யப்படும் புகையிலையின் தொகை 1800 கண்டிக்கு மேற்படவொண்ணுதென்றும்; வருஷந்தோறும் அத் தொகையில் நூற்றுக்குப் பத்துவீதமான கண்டி புகையிலையைக் குறைத்துக் குறைத்து ஏற்றுமதி செய்தல் வேண்டுமென்றுஞ் சட்டம்விதித்தனர். இந்தக் கட்டுப்பாட்டுச் சட்டம் நிலைபெறுமானல், இன்னும் 10 வருட காலங் கழிய யாழ்ப்பாணத்திலிருந்து மலையாளத்திற்கு ஒரு கண்டி புகையிலைதானும் அனுப்ப இயலாது நேரும்.

நீடித்த காலமாக இருநாட்டினர்க்கும் பயன்படக்கூடியதாய் நடைபெற்று வந்த யாழ்ப்பாணம் மலையாளப் புகையிலை யாபாரத்தை அறவே விட்டுவிடுவதா என்பதுதான் ஆசாங்கை. இற்றைக்கு 20 வருஷங்கட்கு முன்னே இந்துசாதன ஆங்கிலப்பிரசுரத்தின் கௌரவ ஆசிரியராகவிருந்த ஸ்ரீமான். அ. சபாபதி இந்த யாபாரத்திற்கு இடையூறு நேரும்போதெல்லாம் தம்பத்திரிகை வாயிலாகப் பல நியாயங்களைக் காட்டியும், தாம இலங்கைச் சட்டநிரூபண சபையின் பிரதிநிதியாக இருந்த காலத்தில் இவ்விஷயமாக நேரும் இடையூறுகளை இலங்கை அரசினர்க்கு எடுத்துத் தெருட்டி இவர்கள் மூலமாக, திருவிதாங்கூர் அரசினரைக்கொண்டு அவ்விடையூறுகளை நீக்குவித்தும், சிற்சில காலங்களில் தாமே நேரிற் சென்று திருவிதாங்கூர் அரசினருடன் கலந்துபேசியும் இவ் விஷயத்தை ஒழுங்குபடுத்தி வந்தார். அதன்பின் யாழ்ப்பாண மலையாளப் புகையிலை யாபாரச் சங்கத்தார் காலந்தோறும் இந்தப் பிரதான யாபாரத்திற்கு நேரும் இடையூறுகளை ஒருவாறு நீக்கிவந்தனர். ஆனல் இப்பொழுது இவ் வியாபாரத் தொடர்பிற்கு அகர்த்தம் நேருமென எண்ணக் கிடத்தலால், குறித்த புகையிலைச் சங்கத்தாரும் ஐக்கியசங்கப்பகுதியாரும் விவசாய வியாபாரப் பகுதிக்குரிய மந்திரிமாரும் இலங்கைப் பாராளுமன்றத்திலுள்ள அங்கத்தினரும் ஒருங்குசேர்ந்து உழைத்து இரு நாட்டிற்கும் பெரும்பயன் தருவதாகிய இந்த யாழ்ப்பாண மலையாளப்புகையிலை வியாபாரத்தை விருத்தியோடு நடைபெறச் செய்தல் வேண்டும்.

நமது சோதிடப்பகுதி

ஸ்ரீ ராதாகிருஷ்ணன் கணிப்பது

உங்களுக்குரிய இந்தவாரப் பலன்கள் (20-5-51—26-5-51)

மேடராசி அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்.

இவ்வாரத்தின் முதன் மூன்றுநாளும் அவதானமாக நடந்துகொள்க; தேகசுகக்கிருக்க இடமுண்டு; புதன்கிழமைக்குப் பின் எதிரிகளை வெல்லலாகும்; வாரமுடிவில் எதற்கும் பொறுப்பேற்றுக்கொள்ளவொண்ணுது; செலவிற்குப் போதிய வருவாயுண்டு.

இடபராசி கார்த்திகை 2, 3, 4-ம்கால்கள் ரோகிணி, மிருகசிரீடம் 1, 2-ம் பாதம்.

இன்னுஞ் சில காலத்திற்குத் தேகசுகத்தைப் பேணுக; கண்ணினும் சுகவீனமுண்டாதல்கூடும்; புதனவியாழக்கிழமைகளில் அவதானமாக நடந்துகொள்க. பார்க்கும் உத்தியோகத்திற் சித்தியுண்டு; சுற்றமித்திராலும் உதவியுண்டு.

மிதுனராசி மிருகசிரீடம், 3, 4, திருவாதிரை, புனர்பூசம் 1, 2, 3.

ஆண்பாலார்க்குப் பெண்பாலாராலும் பெண்பாலார்க்கு ஆண்பாலாராலும் உதவியுண்டு; முதிர்ந்த ஒரு சுற்றத்தவரின் சகாயமுங் கிடைக்கும்; வெள்ளி சனிக்கிழமைகளிற் சாவதானமாக நடக்க.

கடகராசி புனர்பூசம் 4-ம் பாதம், பூசம், ஆயிலியம்.

புதிய முயற்சிகள்வாயிலாக, வினைத்த கருமங் கைகூடும்; கருமஞ் செய்தற்கு மிகவும் வாய்ப்பான வாரம்; பிரயாணஞ் செய்யவேண்டியும் வரும்.

சிங்கராசி மகம், பூரம், உத்தரம், 1-ம் பாதம்.

மனஆறுதல் இத்தக்கிழமையில் இல்லையெனலாம்; ஆனுற் பொருள் வருவாயுண்டு; வாரமுடிவிற் குடும்பப் பிணக்கு சேரக்கூடும்.

கன்னிராசி உத்திரம் 2, 3, 4-ம் பாதம் அத்தம், சித்திரை 1, 2-ம் பாதம்.

இவ்வாரத்தில் இடையறுமுயற்சியினுல் லாபமுண்டு; மக்கள் ஒத்துழைப்பார்கள்; இது ஒரு அநுகூலத்தோடும் மனரம்மியத்தோடுங் கூடிய வாரமாகும்.

துலாம் சித்திரை 3, 4-ம் பாதம் சுவாதி விசாகம் 1, 2, 3-ம் பாதம்.

எவ்வளவு வருவாயுண்டோ, அவ்வளவு செலவும் சேரும்; தேகசுகத்தை அவதானமாகப் பேணவும்; எதும் இடையூறும் நேர இடமுண்டு; எவரோடும் பிணங்கிக்கொள்ள வொண்ணுது.

விருச்சகராசி விசாகம் 4-ம் பாதம் அநுஷம், கேட்டை.

தூரதேசத்திலிருந்து நல்ல செய்தி கிடைக்கும்; குடும்பத்தில் விபரீதவிளக்கம் நேரக்கூடும். கிழமை முடிவிற் பணவரவும் நல்ல பொழுது போக்குமுண்டாம்.

தனுராசி மூலம் பூராடம் உத்தராடம் 1-ம் பாதம்.

இவ்வாரத்தில் மிக அதிகமான வேலையுண்டு; கோபத்தையும் வாக்குவாதத்தையும் தவிர்த்துக்கொள்க. கிழமை முடிவில் எதிரிகள் அபஜெயமடைவர்.

மகரராசி உத்தராடம் 2 3 4-ம் பாதம் திருவோணம், அவிட்டம் 1, 2-ம் பாதம்

மன ஆறுதல் இவ்வாரத்தில் இல்லையெனலாம், தேகசுகங் குன்றும்; வீட்டுப் பெண்களாற் சஞ்சலமுண்டு; சில காலத்திற்குப் பொறுமையோடிருந்து நடப்பதைக் காண்பது நன்மையாகும்.

கும்பராசி அவிட்டம் 3, 4-ம் பாதம் சதயம், பூரட்டாதி 1-ம் 2-ம் 3-ம் பாதம்

இதுகாறுமிருந்த சங்கடங்கள் தேய்ந்தொழியும்; பழைய நண்பரொருவரால் அதிக உதவியுண்டு. கிழமை முடிவிற் செலவு அதிகப்படும்.

மீனராசி பூரட்டாதி 4, உத்தரட்டாதி, ரேவதி.

தேகசுகமுண்டாம்; பெரியாராற் சில நன்மை கிடைக்கும்; புதியவர்களால் லாபமுண்டு; இட்ட திட்டங்களைக் கொண்டு இடையறு முயற்சி செய்க.

பொலிஸ் பரிசோதகருக்கு மாருக முறைப்பாடு

காலிப்பகுதியிலுள்ள ஏ. எச். ஈ. பர்ணுந்து என்னும் உப பொலிஸ் உத்தியோகத்தர் கண்டபடி சனங்களை அடித்து இம்சித்து வருகிருர் என்ற முறையீடு காலி நகரசங்கக் கூட்டத்தில் சென்றவாரம் எடுத்துப் பேசப்பட்டது. குறித்த பொலிஸ் தலைவரை அழைப்பித்து விசாரித்தற்கு ஒரு விசாரணைச்சபை நியமிக்கவேண்டுமென மேற்படி நகரசங்கத்தார் பொலிஸ் தலைவராகிய சேர் ரிச்சாட் அலுவிகாரையைக் கேட்டிருக்கின்றனர்.

115 வயசுள்ள மூதாட்டி

காம்பன் கரச்சிப்பகுதியில் 115 வயசுவரையுள்ள சி. பிரகாயம்மாள் என்னும் ஒரு மூதாட்டி வசிக்கின்றனளாம்; இன்னமும் அக்கிழவி பல்லுப்பிடுங்குதல் முதலிய வேலைகளைச் சோர்வின்றிச் செய்கின்ருளாம்; பற்கள் விழவுமில்லையாம்; முதுகு கூனவுமில்லையாம்; மக்கள் 9. பேர்; பேரப்பிள்ளைகள் 25 பேர்: பூட்டப்பிள்ளைகள் 40 பேர்; இவ்வழித்தோன்றல்களுட் பலர் நரைதிரை மூப்படைந்துவிட்டனராம்.

சூதாட்டத்தால் நேர்ந்த தற்கொலை

உவெலிப்பெண்ணையென்னும் இடத்தில் வசிக்கும் ரி. எம். செம்பேசிஙி என்பவன் கண்டபடி சூதாடி தன்பொருளையெல்லாம் போக்கடித்தான். பொடிநோனு என்னும் அவனுடைய மனைவி அவனைச் சூதாடவேண்டாமென இரந்தாள் புத்திசொன்னுள் அடிக்கடி. ஆனுலவன் சூதாட்டத்தை விடவில்லை. அவள் மனம் சகியாமல் நச்சுத்திராவகத்தை உட்கொண்டு மாண்டாள்.

அச்சிடுங் காகிதம்

போதியளவு ஆக்கப்படுகின்றன

கனடா தேசத்தில் சென்ற ஆண்டில் ஆக்கப்பட்ட புதினத்தாள்களின் தொகை 54,50,000, தொன் நிறைகொண்டதாம். இதனுல் முந்திய ஆண்டைக் காட்டிலும் 171 தொன் நிறைகொண்ட காகிதம் மேலதிகமாக ஆக்கப்பட்டுள்ளன. காகிதம் ஏற்றுமதி செய்யாமல் தடுக்கும் அரசினர் கட்டுப்பாடு ஒன்றுமில்லை; தேவையான காகிதம் பெறலாமாம்.

பத்திராசிரியருக்குக் கடிதம்

பாவைக் கூத்து

ஐய,

17-5-51-ல் வெளியான இந்துசாதனப் பத்திரிகையில் "பாவைக்கூத்து" என்னும் பொருள்பற்றித் தாங்கள் எழுதிய ஆசிரிய வசனங்களைக்கண்டு அளவிலா மகிழ்ச்சியும் கவலையும் ஒருங்கு அடையலானேன். பாவைக்கூத்தின் சிறப்பியல்பினைச் சொல்லோவியத்தில் தீட்டியிருப்பதைக்கண்டு ஒருபால் மகிழ்ச்சி; ஆனால் இவ்வளவு சிறந்த தமிழ்க் கலைக்கு யாழ்ப்பாண மக்கள் புத்துயிரளியாது வாளாவிருப்பதுகண்டு மற்றொருபாற் கவலை.

தமிழ்விழாவின் ஓர் அம்சமாக அமைத்த பாவைக்கூத்தினை நடத்திக் காட்டியவர்கள் ஒட்டகப்புலத்தைச் சேர்ந்த திரு. க. தம்பிப்பிள்ளையும், திரு. க. தம்பாபிள்ளையும் இவர்களுடைய கோஷ்டியினரும் என அறியலானேன். இவர்கள் அத்தினத்திற் பாடிய பூதத்தம்பி நாடகப் பாட்டுக்கள் தனிச் சோபையுடன் விளங்கின. இவ்வழகிய பாட்டுக்கள் அழிந்தொழியாவண்ணம் போற்றிப் பாதுகாத்தல் தமிழறிஞர்தம் பெருங் கடனாகும். இத்துறையில் ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச்சங்கம் ஆதியாம் கலாவிருத்திச் சங்கங்கள் சிறிது ஆர்வங் கொள்ளவேண்டும். பூதத்தம்பி நாடகநூலை அச்சிடுவதில் யாழ்ப்பாணத்தவர்கள் அபிமானங் கொள்வார்களா?

மேலும் நாட்டுப் பாடல்களைச் சேகரித்து ஒலிப்பதிவு செய்வதில் நாட்டங்கொண்டுள்ள 'ரேடியோ சிலோன்" அதிகாரிகளும் பூதத்தம்பி நாடகத்தை ஒலிப்பதிவு செய்வது விரும்பத்தக்கது. டட்டாப் பாட்டுப்போன்ற நவீன சினிமாப் பாட்டு மெட்டுக்களைப் பழைய நாடகங்களுட் புகவிடாமற் பாதுகாத்தல் வேண்டும். ரேடியோ அதிகாரிகள் தமிழ் மக்களுக்கு அருந்தொண்டாற்ற அரியதோர் சந்தர்ப்பமாக இத்துறையினைப் பயன்படுத்திக்கொள்வார்கள் என நம்புகிறேன். நிற்க,

காலனைக் காலால் உதைத்த மார்க்கண்டருக்கு ஈசன் அபயமளித்ததைத் தாங்கள் எழுதியிருப்பதை வாசிக்கும்பொழுதே கன்னெஞ்சம் படைத்த எம்போலியர்க்கே உரோமஞ் சிலிர்த்து உள்ளம் உருகத் தொடங்குகின்றது! இந்நிகழ்ச்சியினைப் பாவைக் கூத்துமூலம் மேடையிற் பார்க்கும்பொழுது மக்கள் பரவசமடைவார்கள் என்பதிற் சந்தேகமில்லை. எழுத்துவாசனையற்ற மூதாத்த மக்களுக்குச் சமய அறிவு புகட்டப் பாவைக்கூத்துச் சிறந்த சாதனமாக விளங்குமன்றோ? சமயஸ்தாபனங்களும் இக்கலையை வளர்ப்பதில் ஈடுபடலாம்.

பாவைக்கூத்தைப்பற்றி எழுதிய தாங்கள் "ஆட்டுவித்தால் ஆரொருவர் ஆடாதாரே" என்ற பேருண்மையினையும் அறிவுறுத்தியதற்காக மீண்டும் எனது நன்றி தங்கட்கு உரியதாக.

இப்படிக்கு
தங்களன்புள்ள
குல. சபாநாதன்

வெள்ளவத்தை
12—5—51.

சன்மார்க்கம்

1-ம் பக்கத் தொடர்ச்சி

பொய்வந் துழலுஞ் சமயநெறி
புகுதவேண்டா
முத்தி தருந்
தெய்வ சபையைக் காண்பதற்குச்
சேரவாருஞ் செகத்தீரே"

என்று திருவாய்மலர்ந்தருளியுள்ளார்.

சன்மார்க்க மென்பதற்கு நல்லொழுக்கமெனப் பொருள்கொண்டு அறநூல்களில் விதித்தன செய்தலும், விலக்கியன வொழித்தலுமா மெனபது மொன்று. 'பொய்யிற் புலவன்' என்று புகழ்ந்து கொண்டாடப்பெறும் வள்ளுவர் தம் தெய்வ நூலில் வகுத்துக் காட்டிய கடவுட் பக்தி, அருள், அன்பு, பரோபகாரம், நடுநிலைமை, வாய்மை, கொல்லாமை, கள்ளுண்ணாமை முதலியவான ஒழுக்க வகைகளெல்லாம் சைவர்கள் இன்றியமையாது மேற்கொள்ளவேண்டு மென்று சாத்திரங்கள் வற்புறுத்திக் கூறுதலானும், இவ்வொழுக்கங்களினின்றும் வழீஇயோர்க்கு மிகுதியான தண்டங் கூறுதலானும், இவைமுற்றும் இச் சமயத்து ளடங்குதலானும் இந் நெறி சன்மார்க்க மென்பதிலோர் ஐயமின்று.

திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் குருபூசை

இந்த வைகாசிமீ ௯உ (23-5 51) புதன்கிழமை, யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபை யாதரவில் சைவாச்சிரம நாவலர் மண்டபத்தில் திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார் குருபூசை கீழ்க்காணப்படும் கிரமப்படி நடைபெறும். பகல் 9 மணி தொடக்கம் 1 மணிவரை கடவுளாராதனை, நால்வர்பூசை, திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் சரித்திரம் படித்தல் தேவாரம் ஓதல் மாகேசுர பூசை இரவு 6½ தொடக்கம் 9 மணி வரை—நீராவிமடம் ஸ்ரீமத். ந சோமசுந்தரக்குருக்கள் தலைமையிற் சொற்பொழிவுகள் "திருஞானசம்பந்தரும் முத்தமிழும்" — பண்டிதர் வ மு. இரத்தினேசுவர ஐயர் "திருஞானசம்பந்தர் சோதியுட் கலத்தல்" சரவணையூர் திரு. வே. சோமசுந்தரம் சைவாபிமானிகள் யாவரும் சமுகமளிப்பார்களாக.

மு. மயில்வாகனம்
சமயப்பிரசார அமைச்சர்
16—5—51.

M 118 18—5—51.

பகிரங்கக்கடிதம்

தமிழ்விழாவும் பாடசாலை ஆசிரியர்களும்

தமிழ்விழா தமிழர்களுக்கு இன்றியமையாதது. அதன் முக்கியத்தைக் கருதிக் கல்விப்பகுதியாரும் கல்வி மந்திரியாரும் சுற்றுநிருபமூலமும் பத்திரிகைச் செய்தி மூலமும் தமிழ்ப் பாடசாலைகளுக்கு (1-5-51 — 2-5-51) ஆகிய இரு நாட்களும் விடுதலைகொடுக்கும்படி அறிவித்தார்கள். தமிழர் வசிக்கும் பகுதிகளிலுள்ள பாடசாலைகள் எல்லாம் தமிழ்விழாவுக்காக மூடப்பட்டன. ஆனால் யாழ்ப்பாணக் குடாநாட்டிலுள்ள சில பாடசாலைகள் அவற்றின் பராமரிப்புக்காரரும் தலைமையாசிரியர்களுமான ஒருசிலரின் மூட்டைப்பிடிவாதத்தினால் நடாத்தப்படலாயின. அப்பாடசாலைகளின் சில ஆசிரியர்கள் விடுதலை விண்ணப்பப் பத்திரமனுப்பிவிட்டுத் தமிழ்விழா சென்றனர். எனவே (1-5-51—2-5-51) ஆகிய இரு தினங்களும் விடுதலைபெற்ற ஆசிரியர்களுக்கு வித்தியாபகுதியார் எவ்விதமான விடுதலை அனுமதிப்பர். முழுச்சம்பள விடுதலையா? சம்பளமற்ற விடுதலையா?

தமிழ்விழாவுக்குத் தமிழ் ஆசிரியர்கள் போகமுடியாமல் தடைசெய்த பாடசாலைக்கடமை செய்யும்படி வற்புறுத்திய எவனும் உண்மைத் தமிழாசிரியனாவனா?

மோசக்காரர்களின் கொட்டமடக்கவும், தமிழினதும் தமிழாசிரியரதும் மதிப்பை நிலைநிறுத்தவும், வித்தியா பகுதியார் தமிழ்விழாவுக்கு விடுதலை பெற்ற இலங்கைத் தமிழ் ஆசிரியர்களுக்கும் (1-5-51 — 2-5-51) ஆகிய இருநாட்களுக்கும் முழுச்சம்பள விடுதலை அனுமதிக்கும்படி சகல பாடசாலைகளின் நிர்வாகிகளுக்கும் அறிவித்து ஆவன செய்வார்களா?

இங்ஙனம்,
ஒரு தமிழ் ஆசிரியன்
9—5—51.

நீரில் மூழ்கிய சிறுவனை மீட்க முயன்று தானும் மாண்டான்

விஜயரத்தின என்னும் சிறுவனும் அவன் கூட்டாளிமார் நால்வரும் ஒரு வள்ளத்தில் ஏறிக்கொண்டு பெருகிப்பாயும் ஆற்றைக் கடக்க முயன்றபோது கட்டாற்றிற் போல வள்ளம் கவிழ்ந்துவிட ஏனைய நால்வரும் ஆற்றிற்கு மேலுள்ள மரக்கொம்பர்களைப் பிடித்துத் தப்பிக்கொள்ள விஜயரத்தின மாத்திரம் ஆற்றில் அள்ளுண்டு போகக் காணப்பட்டான். அவனை மீட்கும்படி ஆற்றங்கரையில் நின்ற பொடியப்புகாமி என்னும் ஒரு மனிதன் ஆற்றில் குதித்து நீந்திச் சென்றபோது அது அவனையும் அள்ளிச் சென்றது. இருவருடைய பிரேதங்களும் பின்னர் ஆற்றங்கரையில் ஒதுங்கிக்கிடக்கக் காணப்பட்டது.

விளம்பரம்

யாழ்ப்பாணத் திந்துக்கல்லூரிக் கார்னிவல் மைதான முகப்பிலே கெம்பீரமாக நிறுத்தப்பட்டிருந்த கருங்கற் கட்டடம் போன்ற கோபுரத்தை விற்பனை செய்யப்போகிறோம்.

கல்யாணவீடு திருவிழா முதலிய விசேஷ வைபவங்களுக்கு நாலைந்து விதமாகச் சுருக்கியும் பெருக்கியும் அலங்காரமாக அமைத்துக் கொள்ளக்கூடிய விதமாக அதனை அமைத்திருக்கிறோம் எல்லாவற்றையும் மடக்கி ஒருசிறிய அறையிலே அடக்கக்கூடிய விதமாகவும் அதனையமைத்திருக்கிறது

வேண்டுவோர் நேரிலோ கடித மூலமாகவோ கீழ்க்கண்ட விலாசத்துக்கு மனுச்செய்க

V. E. Moorthy
Carnival - Lay - Out
J. H. C. D. J Carnival
Jaffna.

M 18, 22

சோர வியாபாரம்

கொழும்பு புறக்கோட்டையைச் சேர்ந்த கன்னார் தெருவில் சென்ற செவ்வாய்க்கிழமை ஆர். சுப்பிரமணிய ஆச்சாரி ஐப்புரபாப், ஐங்கினி அம்மாள் சாகுவதி, இராமசுவாமிப் பண்டாரம் ஜோனா பர்னாந்து செல்லையா என்னுமிவர்கள வசமிருந்து 28 றாத்தல் நிறை கொண்ட அபினும் 232 றாத்தல் நிறைகொண்ட கஞ்சாவும் எடுக்கப்பட்டன. செல்லையா என்பவனைத் தவிர ஏனைய எதிரிகளெல்லாரும் தனித்தனி 550 ரூபா பிணையில் விடுபட்டனர். செல்லையாவுக்கு ரூபா 10,000 பிணை விதிக்கப்பட்டமையால் பிணையில்போக முடியவில்லையாம்.

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி "கார்னிவல்"

இக் கொண்டாட்டம் முன்னர்த்தெரிவித்தபடி 2 வாரகாலம் இயன்ற வரையிலே அழகுமுறையில் நடைபெற்றுச் சென்ற ஞாயிற்றுக்கிழமை நிறைவெய்தியது. இந்துக்கல்லூரியின் பக்கத்தில் புதிதாகக் கட்டப்பட்டு வரும் இரண்டு அடுக்கோடு கூடிய கலாசாலையின் கட்டட வேலையைப் பூர்த்திசெய்தற்கான போதிய நிதியை ஈட்டுவதற்கே இக் கொண்டாட்டம் தொடங்கப்பட்டது. காலந்தோறும் கொண்டாட்டம் தொடங்கும்போது பல அறிஞர்கள் வந்து நாளுக்கொருவராய் கொண்டாட்டத்தை ஆரம்பித்து நல்ல விஷயங்களைப் பேசி, தங்கள் தங்களாலியன்ற பொருளையும் உதவினார்கள். குறித்த கொண்டாட்டம் லாபமான முறையில் நிறைவேறியது. பல அபிமானிகள் அந்த வேலையில் குறித்த வித்தியா தாபனத்தின்பொருட்டுப் பொருள் உபகரித்தார்களென அறிகிறோம். குறித்த கட்டடம் இனிது நிறைவெய்துக.

திருச்சி ரேடியோ

※ இசைத்தட்டு

சனி மே 19

காலை 7 10 ஆரம்பம் 7 15 தமிழில் செய்தி 7 30 அரயபுரம் என் சுகுமணி பாட்டு 8 ஆங்கிலத்தில் செய்தி 8 15 சித்ரகானம்* 8 30 முடிவு.

1 நீங்கள்கேட்டவை * 1 30 ஆங்கிலத்தில்செய்தி 1 40 ஹிந்தியில்செய்தி 1 50 வாத்யஇசை * 2 தமிழில்செய்தி 2 10 சித்ரகானம் * 2 45 முடிவு.

மாலை 5 30 புல்லாங்குழல் ஆ இ ரே வித்வான் 5 45 இசைப்பயிற்சி 6 ஆங்கிலத்தில்செய்தி 6 10 அறிவிப்புகள் 6 15 ரேடியோவாத்யகோஷ்டி 6 30 கிராம நிகழ்ச்சிகள் 7 15 தமிழில்செய்தி 7 30 சித்ரகானம் * 7 45 ஈ ராணி சங்கரசாஸ்திரி வீணை 9 ஆங்கிலத்தில்செய்தி 9 15 ஆங்கிலத்தில் ... 9 30 உஸ்தாத் முஷ்டாக் ஹுசேன் ஒலிப்பதிவு 10 முடிவு.

ஞாயிறு மே 20

காலை 7 10 ஆரம்பம் 7 15 தமிழில்செய்தி 7 30 இசைச்சுவை ஒலிப்பதிவு 8 ஆங்கிலத்தில்செய்தி 8 15 சித்ரகானம்* 8 30 முடிவு.

12 ஜெயா ஸ்ரீமதி பாட்டு 12 45 நாட்டிய சங்கீதம் * 1 மணிமலர் 1 30 ஆங்கிலத்தில்செய்தி 1 40 ஹிந்தியில்செய்தி 1 50 கும்பகோணம் சகோதரர்கள்* 2 தமிழில்செய்தி 2 10 சித்ரகானம் 2 30 செண்டு இசை நிகழ்ச்சி 3 முடிவு.

மாலை 5 30 வைத்தீஸ்வரன் கோயில் டி பி எ முத்துக்குமாரசாமி வீணை 5 45 என் எல் சோமயாஜுலு பாட்டு 6 ஆங்கிலத்திலசெய்தி 6 10 அறிவிப்புகள் 6 15 நீங்கள் கேட்டவை 6 30 கிராம நிகழ்ச்சிகள் 7 15 தமிழில்செய்தி 7 30 சித்ரகானம் 7 45 இவர்கள் இன்றி பேச்சு 8 நிலவு நாடகம் 8 30 ஜெயா ஸ்ரீமதி பாட்டு 9 ஆங்கிலத்தில செய்தி 9 5 வைத்தீஸ்வரன் கோயில் டி பி எ முத்துக்குமாரசாமி வீணை 10 முடிவு.

திங்கள் மே 21

காலை 7 10 ஆரம்பம்* 7 15 தமிழில்செய்தி 7 30 சுசீந்ரம் பி ஸ் மணி பாட்டு 8 ஆங்கிலத்தில்செய்தி 8 15 சித்ரகானம் * 8 30 முடிவு.

1 நீங்கள் கேட்டவை * 1 30 ஆங்கிலத்திலசெய்தி 1 40 ஹிந்தியில்செய்தி 1 50 உஸ்தாத பயாஸ்கான் * 2 தமிழில் செய்தி 2 10 சுசீந்த்ரம் பி எஸ் மணி பாட்டு 2 45 முடிவு.

மாலை 5 30 ஸிதார் ஆ இ ரே வித்வான் 5 45 இசைப்பயிற்சி 6 ஆங்கிலத்திலசெய்தி 6 10 அறிவிப்புகள் 6 15 திருச்சிவாத்யகோஷ்டி 6 30 கிராமநிகழ்ச்சிகள் 7 15 தமிழில்செய்தி 7 30 சித்ரகானம்* 7 45 தென்னாட்டுமுசுதி பேச்சு 8 தனிவாத்யக்கச்சேரி 8 30 குரலிசை * 9 ஆங்கிலத்தில்செய்தி 9 15 தஞ்சாவூர் கே பாலகிருஷ்ண பிள்ளை பாட்டு 10 முடிவு.

செவ்வாய் மே 22

காலை 7 10 ஆரம்பம் 7 15 தமிழில் செய்தி 7 30 திருத்தங்கூர் ஆர் செல்லப்பா பாட்டு 8 ஆங்கிலத்தில் செய்தி 8 15 சித்ரகானம் * 8 30 முடிவு

1 டி சௌடையா வயலின்* 1 15 பெண்ணுலகம் 1 30 ஆங்கிலத்திலசெய்தி 1 40 ஹிந்தியிலசெய்தி 1 50 சிதம்பரம் ஜயராமன், ராஜரத்னம்* 2 தமிழில் செய்தி 2 10 திருத்தங்கூர் ஆர் செல்லப்பாப்பா பாட்டு 2 45 முடிவு.

மாலை 5 30 திருச்சேறை வி ஏ சிவசுப்பிரமணியம் நாகஸ்வரம் 5 45 இசைப்பயிற்சி 6 ஆங்கிலத்திலசெய்தி 6 10 அறிவிப்புகள் 6 15 எ-கூர் இ எம் மணியா பாட்டு 6 30 கிராமநிகழ்ச்சிகள் 7 15 தமிழில்செய்தி 7 30 ஸர்க்கம் * 7 45 கிவளூர் மீனாக்ஷி சுந்தரம்பிள்ளை பாட்டு 9 ஆங்கிலத்திலசெய்தி 9 15 திருச்சேறை வி ஏ சிவசுப்ரமணியம் நாகஸ்வரம் 10 முடிவு.

யாழ்ப்பாணம் ஐக்கியலாபநிதி

1918-ம் ஆண்டு ஸ்தாபிதமானது.

வங்கிக்காரர் மூலநிதி 8 லட்சம் ரூபா.
இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப் பணம் ரூபா
134,3670
100 ரூபா விகிதமான 8000 பங்குகள்

பங்குப்பணங் கட்டுமுறை.

மாசமொன்று 1 ரூபா விகிதமாக 75 மாசகாலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக்கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்.

தினசரிப் பற்றுவரவு

கணக்கு சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானால் ஒரு விகித வட்டியுடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம்

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப்பணம்

க்ஷேமப்பணம் 3 மாசம, 6 மாசம், 9 மாசம், 12 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும் வட்டியும் முறையே 1 விகிதம், 2 விகிதம் 4 விகிதம் 6 விகிதமாகக் கொடுக்கப்படும்.

உண்டியல்கள்

கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்க விதமாகக் கொடுக்கப்படும். தொலைவாய் இராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும் வாய்ப்பான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.

இந்தியாகோட்டு வட்டத்திற்கு மாற்றிக்கொடுக்கப்படும்.

கடன்.

நகைகள் ஈடுவைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். வட்டி 9 விகிதம் அறவிடப்படும். (ஈடுவைத்தவர்கள்) முதலையும் பாகம்பாகமாகக்கொடுக்கலாம்

இன்னும் வேண்டிய விபரங்களை என்மூலமாக அறிந்துகொள்ளலாம்

S. கனகசபை
சிறாப்பர்.

Std. 14 20-11-46—20-11-9

ஈழநாடும் சைவமும்

1-ம் பக்கத் தொடர்ச்சி

மனைவிமக்கள் இல்லாமையன்று. இலட்சியம் பொருந்திய வாழ்வு என்று ஒரு வாழ்வு இல்லாமையே இக்காலத்தில் எல்லாரிடத்து மிருக்கின்ற எவ்வகையான மனக் கொந்தளிப்புக்களுக்குங் காரணமாம். எனவே வளர்ந்தோர் கல்வியில் ஊக்கமெடுக்கின்ற எங்கள் ஆசிரியர் வளர்த்தோர்க்கு இன்று வேண்டியிருப்பது வாழ்க்கையின் இலட்சியமே (Ideal) என்பதை முதலில் உணருதல் வேண்டும். உணர்ந்து — எங்கள் பரம்பரியமான ஒரு இலட்சியத்தை உணர்த்தவல்ல — புராண படனம்போன்ற உயர்ந்த முறைகளை எம் நாட்டிற் பரப்புவதற்கு ஆவன செய்தல் வேண்டும், அதனிற்க.

பதிப்பாசிரியர்கள்

மாதவச் சிவஞான சுவாமிகள் எழுதியருளிய சிவஞானமாபாடியமே திருவாவடுதுறை ஆதீனத்தின் மாபெரும் பொக்கிஷமாகும். அது ஏட்டுச்சுவடிகளில் எழுதப்பெற்றபடியே ஆதீனத்தின் மறைபொருளென நீண்டகாலமாக இருந்திருக்கிறது. அதனை முதலிற பார்த்து உணரும் பாக்கியப்பேறு எங்கள் சபாபதி நாவலர் அவர்களுக்கே கிடைத்தது. அவர்கள் ஆதீனவித்துவானாயிருந்த காலத்தில், சிதம்பரத்தில் வசித்துக்கொண்டிருந்த யாழ்ப்பாணம் சுவாமிநாத பண்டிதர் எப்படியோ ஒருவாறு மாபாடியத்தின் சில பாகங்களைப் பெறக்கூடியதாயிருந்தது. அந்த 'மாபாடியத்தின் சில பாகங்களைப்பெற்று பிழையறப் பரிசோதித்துத் தாம் நடாத்திவந்த அச்சியந்திரசாலையில் அவற்றை அச்சிட்டு வெளிப்படுத்தினர். ஆறுமுகநாவலர், சபாபதிநாவலர் ஒப்ப இவர் பசைவருக்கஞ்சா இயற்கையினர். தென்னாட்டிலுள்ள பல ஊர்களிலும் சென்று பலவர் மத்தியிலும் நின்று சைவப்பிரசங்கங்கள் செய்து வந்தவர். திருச்செந்தூர்ப் பதியில் ஒரு சைவப் பாடசாலை தாபித்து தாமே நடத்திவந்தவர். மூவர் தேவாரத்தையும் பல ஏட்டுப் பிரதிகளோடும் ஒப்பு நோக்கிப் பரிசோதித்துச் சுத்தபாடமாக அச்சிட்டு வெளிப்படுத்தியவர். தென்னாட்டிலிருந்துகொண்டு சைவ சாஸ்திரங்களையும் சைவத் திருமுறைகளையும் தேடி எடுத்து, அவற்றைப் பிழையறப் பரிசோதிப்பதையும், சுத்தபாடமாக அச்சிட்டு வெளிப்படுத்துவதையும் யாழ்ப்பாணத்துச் சைவப்பெரியார், அனைவரும் உயர்ந்த திருப்பணியெனக் கருதி வந்திருக்கின்றார்கள் என்பது வெளிப்படை. சமீபத்தில் சூரியனார் கோயில் ஆதீனத்தில் தம்பிரானாயிருந்த ஒருவர் யாழ்ப்பாணத்தவர்; இலக்கணசுவாமிகள் எனப்படும் முத்துக்குமாரசுவாமித் தம்பிரான் — அவர்கூடத் தம் முன்னோர் அடிச்சுவடுகளைப் பின்பற்றி நூல்களைப் பிழையறப் பரிசோதித்தும் பதிப்பதுமாகவே இருந்தவர். சூரியனார் கோயில ஆதீனத்தில் எழுந்தருளியிருக்கும் முத்துக்குமாரசுவாமி தேசிக மூர்த்திகளின் பேருதவியுடன் மாதவச் சிவஞான யோகிகளின் மாபாடியம் முழுவதையும் அதன் பூரணவடிவத்தில் அச்சிட்டு வெளியிட்டவர் இவரேயாகும்.

இருமொழிப் புலவர்

தாய்நாட்டில சிலகாலமாக வடமொழி தென்மொழி வேற்றுமை உணர்ச்சி வலுத்து வருகின்றது. அதனால் எத்தனையோ நவீன இயக்கங்கள் தலைகாட்டி வருகின்றன. இந்த வேற்றுமை உணர்ச்சியைப் போக்கி யக்கியை உணர்மை நெறியில் வளர்க்கவேண்டுமென எத்தனையோ பேர் பாடுபடுகின்றனர். எங்கள் நாட்டிலிருந்து தாய் நாட்டிற்குச் சைவத் தொண்டு செய்வதற்கெனச் சென்ற இன்னொரு பெரியார் காசிவாசி செந்திநாதையா அவர்கள். இவரும் நாவலர் பெருமானின் ஞான பரம்பரையைச் சேர்ந்தவரே யாகும். வடமொழியில வேதாகமங்களையும் ஞானசாஸ்திர நூல்களையும் நன்கு ஆராய்ந்தவர். தென்மொழியிலும் அவ்வாறே பக்தி நூல்களிலும் ஞானசாஸ்திரங்களிலும் வல்லுநர். காசி முதல் திருப்பரங்குன்றம் ஈறாக உள்ள இடங்களிற் பற்பல க்ஷேத்திரங்களில் வசித்தவர். சைவசித்தாந்தப் பேரறிஞராயிருந்து சைவப்பிரசங்கங்கள் செய்தவர் தம்மை வந்தடைந்தவர்களுக்கு ஞானாசிரியராய்த் திகழ்ந்தவர். தம் மாணவரின் வேண்டுகோளுக்கிசைந்து 'சைவவேதாந்தம்' தேவாரம் வேதசாரம் முதலிய நூல்கள் இயற்றியவர். இந் நூல்கள் வடமொழி தென்மொழிகளுக்கிடையிலுள்ள வேற்றுமையின்மையை உணர்வதற்கும், வைதிகசைவம் யாதெனத் தெட்டவிளக்கம் சொல்லுவதற்கும் மிகவும் வாய்ப்புடைத்தான அரும் பெரும் நூல்களாகும். இந்நூல்கள் பதிப்பிக்கப் பெற்றுத் தாய் நாட்டிலும் எம் நாட்டிலும் பரப்பப்பெறின் இக்காலத்தில் ஏற்பட்டுள்ள எத்தனையோ விபரீத எண்ணங்கள் எம்மைவிட்டகலும். வடநாடு தென்னாடு ஆகிய இருநாடுகளையும் வடமொழி தென்மொழி ஆகிய இருமொழிகளையும் சமமாக நோக்கி நிற்கும் வைதிக சைவ உணர்வு எங்கும் தழைக்கும்.

— தமிழ்நேசன்.

பிரசுரங்கள்

திருவாதவூரடிகள் புராணம்
உரையாசிரியர்: ம. க. வேற்பிள்ளையவர்கள் செய்த பொழிப்புரையுடன்
விலை ரூபா 2-00

பிரதோஷவிரத மான்மியம் (புதிய பதிப்பு)
சைவவிரதங்களுட் சிறந்ததாகிய இவ்விரதகாலத்திற் சுவாமி கும்பிட வேண்டிய ஒழுங்கு, இதனை அனுட்டிக்க வேண்டிய முறை, புத்தி பூர்வமாகவும் அபுத்தி பூர்வமாகவும் அனுட்டித்தோர் பெற்றபேறு முதலியவற்றை இனிய தமிழ் வசன நடையில் விளக்குவது;
விலை சதம் 40

வில்லி பாரதம்-புட்ப யாத்திரைச் சருக்கம்
பண்டிதர், ம. வே. திருஞானசம்பந்தப்பிள்ளை எழுதிய நண்பொருள் விளக்க விரிவுரை, நூலாசிரியர் வரலாறு முதலியவற்றுடன், 1951ம் 52ம் ஆண்டுகளில நடக்கும் தமிழ் ஆங்கில S. S. C. (எஸ். எஸ். ஸீ.) பரீட்சைகட்குப் பாடமாக விதிக்கப்பெற்றுள்ளது. (2-ம் பதிப்பு விலை ரூ 1—25ச.

அரிச்சந்திர புராணம் - மயானகாண்டம்
மேற்படி பண்டிதர் எழுதிய பொழிப்புரை இலக்கணக் குறிப்பு, நூலாசிரியர் வரலாறு முதலியவற்றுடன் உயர்தர வகுப்புக்களுக்குச் செய்யுட் பாடமாக விதிக்கப்பெற்றுள்ளது.
விலை சதம் 75.

மாணிக்கவாசகசுவாமிகள் சரித்திரம் திருவாசகத்திரட்டுடன்
மேற்படி பண்டிதர் எழுதியது; கொழும்பு விவேகானந்த சபையார் நடத்தும் சைவசமயபாடப் பரீட்சை மேற்பிரிவிற்குப் பாடமாகவிதிக்கப்பட்டது.
விலை ரூ. 1—20 ச.

உலகம்பலவிதக் கதை I. (கோபால நேசரத்தினம்)
ஷை பண்டிதர் எழுதியது. படிக்கப் படிக்கத் தெவிட்டாதது.
விலை ரூ. 1—25 ச.

சைவ சமயசாரம்:
ஆசிரியர் சு. சிவபாதசுந்தரம் (B. A.) அவர்கள் எழுதியது. கொழும்பு விவேகானந்த சபையார் நடத்தும் சைவசமயப் பரீட்சைப் பாடங்களுளொன்றாயுள்ளது.
விலை சதம் 45

"ஆறுமுகநாவலர்" (ஆங்கிலத்தில்)
சைவப்பெரியார் சு. சிவபாதசுந்தரம் (B. A.) எழுதியது; ஆங்கிலமறிந்தோர் எவரும் படிக்கத் தக்கது. முந்தி வெளிவராதது.
விலை 60 சதம் (அணா 10)

முற்பண மனுப்புவோர்க்குத் தபாற் செலவின்றிப்
புத்தகங்கள் அனுப்பப்படும்

Apply: to
PANDIT V. T. SAMBANDHAN
Vannarponnai, Jaffna.

இலங்கை வங்கி

(1938-ம் ஆண்டு 53-ம் இலக்கக் கட்டளைச் சட்டத்தின்படி சட்டபூர்வமாக இணைக்கப்பட்டது)

இலங்கை அரசாங்கத்தின் வங்கிக்காரர்

பதிவுசெய்யப்பட்ட மூலதனம்		7, 500, 000-00
கொடுக்கவிருக்கும்	,,	4, 500, 000-00
கொடுபட்ட	,,	4, 00, 000-00
நிலேதரமான சேமநிதி		3, 000, 000-00

தலைமைக்காரியாலயம்:- பிறின்ஸ்வீதி, கொழும்பு.
நியுயோர்க் ஏஜெண்டுகள்:- ஏர்விங் ட்ரஸ்ற் கம்பனி.
லண்டன் காரியாலயம்:- 4-6-8 ஓவர்ட் கேட் சிற்றி லண்டன்.E. C. 4.
கிளைக்காரியாலயங்கள்:- புறக்கோட்டை,(கொழும்பு) கண்டி, காலி. திருக்கோணமலை, பாணந்துறை, குருநாகலை (பழையநகரமண்டபம்),வதுளை மட்டக்களப்பு.
யாழ்ப்பாணத்துக்காரியாலயம்:-242 ஆஸ்பத்திரிறேட்,யாழ்ப்பாணம்

வாடிக்கைகாரர்களுக்குப் பல விசேஷ வசதிகளை இவ்வங்கி செய்து கொடுக்கின்றது.

நடைமுறைக் கணக்கு:	இலங்கையில் (திருக்கோணமலை வதுளை மட்டக்களப்பு ஒழிந்த) உள்ள எல்லாப் பிரதான நகரங்களிலும் மாற்றக்கூடிய "செக்"குகள் கொமிஷன் இன்றிப்பெற்றுக் கொள்ளப்படும்.
சேமிப்புப் பணம்:	ஆகக்கூடிய தொகை ரூபா 10, 000. வட்டி அதற்கு வருடம் ஒன்றுக்கு 2 விகிதம் கேட்டநேரம் திருப்பிக் கொடுக்கப்படும்.
நிரந்தர சேமிப்பு:	இதற்கான விகிதம் முதலியவற்றைக் கேட்டு அறிந்து கொள்ளலாம்.

கடன்களும் மேலதிகமாகக் கடன் பெறுதலும்:
அங்கீகரிக்கப்பட்ட பிணையின் பேரிற் கொடுக்கப்படும்.

நாணயமாற்று: இதற்கான ஏஜெண்டுகள் உலகெங்கும் உண்டு.
பிறநாட்டுவிவகாரப்பகுதி: ஜீ.ஓ.எச்.கட்டிடம், யோர்க்வீதி,கொழும்பு.
இந்தியா, மலாய் நாடுகளுக்கு அனுப்பக்கூடிய உண்டியல், தந்தி, மாற்றுப் பத்திரங்கள் விஷயமாக விசேஷ வசதிகள் செய்து கொடுக்கப்படும்.

L. P. N சிங்கம்
ஏஜெண்டு

வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலக மெல்லாம்.

Printed and Published by S. P. Kandiah, F. I. S. A. (Lond) residing at 245 Navalar Road, Jaffna, for and on behalf of the Proprietors the Saiva Paripalana Sabai, Jaffna, at their Press, the Saiva Perakasa Press, Vannarponnai, Jaffna, on Friday May 18, 1951